20th August 1960]

Sri T. T. DANIEL : Whereas the policy of the State Government is to assign these poramboke lands where Harijans are residing in favour of the Harijans, will the Government consider the feasibility of extending the same policy to the transferred territory where the poramboke lands are given on the basis of lease alone?

The Hon. Sri M. A. MANICKAVELU : That can also be looked into.

Sri A. VEDARATHNAM : நத்தம் என்பது குடியிருப்புக்கு என்று ஏற்பட்ட நிலம்தானே. அப்படி இருக்கும்போது குடியிருக்கிற ஹரிஜனங்களை அப்புறப்படுத்தாமல் அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து அவைகளை அவர்களுக்குக் கொடுப்பதில் என்ன தடை? ஏன் பட்டா செய்துகொள்ளக்கூடிய உரிமையை அவர்களுக்கு வழங்கக்கூடாது?

The Hon. Sri M. A. MANICKAVELU : ஹரிஜன மக்களுடைய நிலமாக இருந்து அதில் ஜாதி ஹிந்துக்கள் அனுபவித்து வந்தால் அவர்களிடத்திலிருந்து அதை வாங்கி அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கப்படும். அப்படி இல்லாது வேறு நிலமாக இருந்தால், அது அரசாங்க புறம்போக்கு நிலமாக இருந்தால், அதையும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

Sri S. M. ANNAMALAI : சில புறம்போக்கு நிலங்களை மாற்றுவதாக இருந்தால் அந்த ஊர் பஞ்சாயத்து போர்ட் தீர்மானம் போட்டு பாஸ் செய்து தரவேண்டும். அதற்குப் பிறகு கலெக்டருக்கு அனுப்பி நிலம் மாற்றிய பிறகுதான். அங்கே குடியிருப்புக்கு பட்டா தரவேண்டும் என்ற விதி இருக்கிறது. அங்கே பஞ்சாயத்து தலைவராக இருப்பவர்கள் அத்தனை பேரும் ஜாதி ஹிந்துக்களாக இருப்பதால் ஹரிஜனங்களுக்கு சீக்கிரத்தில் நிலம் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே அந்த விதிகளைத் தளர்த்தி புறம்போக்கு நிலத்தை மாற்றுவதாக இருந்தால் அந்த அதிகாரத்தை கலெக்டருக்குக் கொடுக்காமல் அங்குள்ள தாசில்தாருக்கே கொடுத்து விடவேண்டும். மற்றும் பஞ்சாயத்து தீர்மானம் போடாமல் சர்க்காரே நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் அளவில் விதியை மாற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : பஞ்சாயத்து தீர்மானம் போடவேண்டும் என்று சொல்வது நடைமுறையில் நடக்கிற சடங்கு. அந்தச் சடங்கின் பிரகாரம் அவர்கள் செய்கிறார்கள். அவர்கள் எழுதிய பிறகு நியாயமாக எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யும்படி உத்தரவு போடப்படுகிறது.

Road for Machampattu

* 321 *Q.*—**Sri N. MARUDACHALAM** (on behalf of **Sri V.K. KOTHANDARAMAN**) : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலுகாவிலுள்ள மாச்சம்பட்டு கிராமத்திற்கு ரோடு போடும் திட்டத்தின் தற்போதைய நிலைமை என்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : There is no proposal for the formation of a road to Machampattu village in any of the approved schemes. The formation of the road has to be taken up by the Machampattu Panchayat Board as the road is in the panchayat limits.

Slum clearance scheme

* 322 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ல் சேரி ஒழிப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை வீடுகள் கட்ட எவ்வளவு தொகை தேவையென்று சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள் ?

(ஆ) மேற்படி திட்டத்தின்கீழ் எத்தனை வீடுகள் கட்ட எவ்வளவு தொகை தருவதாக மத்திய சர்க்கார் சம்மதித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (ஆ) The Government of India were informed that a sum of Rs. 68 lakhs would be required during 1960–61 for the construction of 496 tenements, and development of 3,055 open plots under the Slum Clearance Schemes. The amount asked for has been allotted.

SRI P. G. MANICKAM : இந்தத் திட்டத்தின்கீழ் சென்னை நகரத்தில் எத்தனை வீடுகள் கட்டப்படும்? ஒவ்வொரு நகரத்திலும் எத்தனை வீடுகள் கட்டப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னை நகரில் 496 வீடுகளும் இதர இடங்களில் 720 ஓபன் டெவலப்ட் ப்ளாட்டும்.

Health Officers in second grade municipalities

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ என். கே. பழனிசாமி அவர்கள் சபையில் இல்லாததால் 323-வது கேள்வியும் பதிலும் சட்டசபையின் விவாத வெளியீட்டில் வெளியிடப்படும்.

* 323 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the number of second grade municipalities in this State; and

(b) the number of Health Officers in those municipalities?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) Fifteen municipalities.

(b) Seven.